DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No.1044/2025

Prosecution PW 4

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | அரவிந்த் |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பஞ்சமாதேவிபுதூரில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. என்னுடன் செந்தில் என்பவர் கையொப்பம்

செய்தார். கடந்த 21.09.2025ம் தேதி காலை 08.00 மணியளவில் புதூருக்கு அருகே உள்ள நானும், செந்தில் எனது மாமாவும் வந்துகொண்டிருந்தபோது, சம்மந்தமாக வெங்கமேடு போலிசார் முதல் நாள் நடந்த சம்பவத்திற்காக, சம்பவ இடம் வந்து விசாரணை செய்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதற்காக சம்பவ இடத்தில் நானும், செந்திலும் பார்வை மகசரில் கையொப்பம் செய்து கொடுத்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் போலிசார் விசாரணையில் டிரைவர் வேலை செய்ததாக சொன்னேன் என்றால் சரிதான். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், நான் விவசாய வேலைதான் செய்து வருகிறேன் என்றால் விவசாய வேலையும் செய்து வருகிறேன், டிரைவராகவும் உள்ளேன். பார்வை மகசரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் எத்தனை முறை என்னை விசாரித்தார்கள் என்றால் பார்வை மகசர் கையொப்பம் செய்த பிறகு விசாரிக்கவில்லை. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், போலிசார் கேட்டுக் கொண்டதற்கினங்க நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**